உ

சிவமயம்

தேவராயசுவாமிகள்

அருளிச்செய்த,

# கந்தர்சஷ்டிகவசம்

இவை

பெங்களூர்

ஸ்ரீ-நமசிவாயமுதலியா

ரவர்களாற்பரிசோதித்துச்

—*—*—

சிங்கார-கிருஷ்ணப்பநாயகர்குமாரர்

கன்னியப்பநாயகரால்

களத்தூர்

வேதகிரிமுதலியார்

குமாரர்

சுப்பராயமுதலியாரது

இயற்றமிழ்விளக்கவச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது

ரௌத்திரி—௵—கார்த்திகை—௴

உ

சிவமயம்

# கந்தர்சஷ்டிக்கவசம்

காப்பு

அமரரிடர்தீர அமரம்புரிந்த...*
குமரனடிநெஞ்சேகுறி.........*

வெண்பா

துதிப்போர்க்குவல்வினைபோந் துன்பம்போ
நெஞ்சிற்-பதிப்போர்க்குச்செல்வம்பலித்துக்
கதித்தோங்கும்- நிஷ்டையுங்கைகூடும்நிமலரரு
ள்கந்தர்-சஷ்டிக்கவசந்தனை.................*

—ரு—

சஷ்டியைநோக்கச்சரவணபவனார்... .....*
சிஷ்டருக்குதவுஞ்செங்கதிர்வேலோன்..... *
பாதமிரண்டில்பன்மணிச்சதங்கை... ...*
கீதம்பாடக்கிண்கிணியாட... ... ...... *
மையநடஞ்செய்யுமயில்வாகனனார்... ... *
கையில்வேலாலெனைக்காக்கவென்றுவந்து *
வரவரவேலாயுதனார்வருக..... ... .....*
வருகவருகமயிலோன்வருக.... ..... .... *
இந்திரன்முதலாஎண்டிசைபோற்ற ... *
மந்திரவடிவேல்வருகவருக...... ... ...*
வாசவன்மருகாவருகவருக ... ....... ...*
நேசக்குறமகள்நினைவோன்வருக... .....*
ஆறுமுகம்படைத்தஐயாவருக..... ......*

நீறிடும்வேலவன் நித்தம்வருக ...... ...... *
சிரகிரிவேலவன் சீக்கிரம்வருக ........ ... *
சரவணபவனார்சடுதியில்வருக ... ...... *
ரஹணபவச-ரரரரரர ...... ... ...... *
ரிஹணபவசா-ரிரிரிரிரிரி .. ... ..-.. *
விணபவசரவணவீராநமோநமோ...ர... *
நிபவசரவண-நிறநிறநிறென...... ...... *
வசரவணப பவ-வருகவருக... ...— ...... *
அசுரர்குடிகெடுத்தஐயவருக .. ... ...... *
என்னையாளும்இளையோன்கையில்... ... *
பன்னிரண்டாயுதம்பாசாங்குசமும்-... ... *
பரந்தவிழிகள்பன்னிரண்டிலங்க... ..... *
விரைந்தெனைக்காக்கவேலோன்வருக... .. *
ஐயுங்கிலியும்அடைவுடன்சௌவும் ..... .. *
உய்யொளிசௌவும்உயிரையுங்கிலியும்... *
கிலியுஞ்சௌவும்-கிளரொளியையும் .. — *
நிலைபெற்றென்முன்நித்தமுமொளிரும்- .. *
சண்முகந்தீயும் தனியொளியொவ்வும்... *
குண்டலியாஞ்சிவகுக தினம்வருக... ... *
ஆறுமுகமும் அணிமுடியாறும் ... .. *
நீறிடுநெற்றியும்நீண்டபுருவமும்... ....... *
பன்னிருகண்ணும்பவளச்செவ்வாயும்- ... *
நன்னெறிநெற்றியில்நவமணிச்சுட்டியும் .. *
ஈராறுசெவியில்இலகுகுண்டலமும்...... .. *
ஆறிருதிண்புயத் தழகியமார்பில் .. *

பல்பூஷணமும்பதக்கமுந்தரித்து... ...
நன்மணிபூண்டநவரத்னமாலையும் ...
முப்புரிநூலு-முத்தணிமார்பும் ... ...
செப்பழகுடையதிருவயிறுந்தியும் ... ...
துவண்டமருங்கில்சுடரொளிபட்டும் ...
நவரத்னம்பதித்தநற்சீராவும் ... ...
இருதொடையழகும்இணைமுழந்தாளும்
திருவடியதனில்சிலம்பொலிமுழங்க ...
செக்கணசெககணசெககணசெககண
மொகமொகமொகமொகமொகமொக மொ
நகநகநகநகநகநகநகென... ... நகென
டிகுகுணடிகுடிகுடிகுகுணடிகுண ...
ரரரரரரரரரரரரரரர ... ... ...
ரிரிரிரிரிரிரிரிரிரிரிரிரிரிரி... ... ...
டுடுடுடுடுடுடுடுடுடுடுடுடுடுடு... ... ...
டகுடகுடிகுடிகுடங்குடிங்குகுகு ...
விந்துவிந்துமயிலோன்விந்து ...
முந்துமுந்துமுருகவேள்முந்து ...
என்றனையாளும்ஏரகச்செல்வ... ...
மைந்தன்வேண்டும்வரமகிழ்ந்துதவும்......
லாலாலாலாலாலாவேசமும்... ...
லீலாலீலாலீலாவிநோதனென் ... ...
உன்திருவடியையுறுதியென்றெண்ணும் ...
என்தலைவைத்துன்னிணையடிகாக்க ...
என்னுயிர்க்குயிராமிறைவன்காக்க

பன்னிருவிழியால்பாலனைக்காக்க ... *
அடியேன்வதனம்அழகுவேல்காக்க ... *
பொடிபுனைநெற்றியைப்புனிதவேல்காக்க *
கதிர்வேலிரண்டுகண்ணினைக்காக்க ... *
விதிசெவியிரண்டும்வேலவர்காக்க *
நாசிகளிரண்டுநல்வேல்காக்கப் ... *
பேசியவாய்தனைப்பெருவேல்காக்க... *
முப்பத்திருபல்முனைவேல்காக்கச் ... *
செப்பியநாவைச்செவ்வேல்காக்கக் ... *
கன்னமிரண்டுங்கதிர்வேல்காக்க... ... *
என்னிளங்கழுத்தைஇனியவேல்காக்க ... *
மார்பையிரத்நவடிவேல்காக்கச் ... *
சேரிளமுலைமார்திருவேல்காக்க ... *
வடிவேலிருதோள்வளம்பெறக்காக்கப்... *
பிடரிகளிரண்டும்பெருவேல்காக்க ... *
அழகுடன்முதுகைஅருள்வேல்காக்கப் *
பழுபதினாறும்பருவேல்காக்க... ... *
வெற்றிவேல்வயிற்றைவிளங்கவேகாக்கச் ... *
சிற்றிடையழகுறச்செவ்வேல்காக்க ... *
நாணாங்கயிற்றைநல்வேல்காக்க... ... *
ஆண்குறியிரண்டும்அருள்வேல்காக்கப் ... *
பிட்டமிரண்டும்பெருவேல்காக்க ... *
வட்டக்குதத்தைவல்வேல்காக்கப்... ... *
பணைத்தொடையிரண்டும்பருவேல்காக்க... *
கணைக்கால்முழந்தாள்கதிர்வேல்காக்க *

ஐவிரலடியிணை அருள்வேல்காக்க ... *
கைகளிரண்டுங் கருணைவேல்காக்க ... *
முன்கையிரண்டும் முரண்வேல்காக்க ... *
பின்கையிரண்டும் பின்னவளிருக்க ... *
நாவிற்சரஸ்வதி நற்றுணையாக ... ... *
நாபிக்கமலம் நல்வேல்காக்க ... *
முப்பானாடியை முனைவேல்காக்க ... *
எப்பொழுதும்மெனை எதிர்வேல்காக்க ... *
அடியேன்வசனம் அசைவுளநேரம் — *
கடுகவேவந்து கனகவேல்காக்க ... *
வரும்பகறன்னில் வச்சிரவேல்காக்க ... *
அரையிருடன்னில் அனையவேல்காக்க ... *
ஏமத்திற்சாமத்தில் எதிர்வேல்காக்க ... *
தாமதநீக்கிச் சதுர்வேல்காக்க ... *
காக்கக்காக்கக் கனகவேல்காக்க ... *
நோக்கநோக்க நொடியினினோக்க — *
தாக்கத்தாக்கத் தடையறத்தாக்க ... *
பார்க்கப்பார்க்கப் பாவம்பொடிபட ... *
பில்லிசூனியம் பெரும்பகையகல ... *
வல்லபூதம் வலாஷ்டிகப்பேய்கள் ... *
அல்லற்படுத்தும் அடங்காமுனியும் ... *
பிள்ளைகடின்னும் புழக்கடைமுனியும் ... *
கொள்ளிவாய்ப்பேய்களுங் குறளைப்பேய்களும்
பெண்களைத்தொடரும் பிரமராட்சசரும் ... *
அடியனைக்கண்டால் அலறிக்கலங்கிட ... *

இரிசிகாட்டேரிஇத்துன்பசேனையும் ... *
எல்லிலுமிருட்டிலு மெதிர்படு மண்ணையும் *
கனபூசைகொள்ளுங்காளியோடனைவரும்... *
விட்டாங்காரரும்மிகுபலபேய்களும்... *
தண்டியக்காரருஞ்சண்டாளர்களும் .. *
என்பெயர்சொல்லவுமிடிவிழுந்தோடிட... *
ஆனையடியினில்அரும்பாவைகளும்... *
பூனைமயிரும்பிள்ளைகளென்பும்- ... *
நெகமுமயிரும்நீண்முடிமண்டையும்-... *
பாவைகளுடனேபலகலசத்துடன் ... *
மனையிற்புதைத்தவஞ்சனைதனையும் - ... *
ஒட்டியசெருக்கும்-ஒட்டியப்பாவையும்... *
காசும்பணமுங்காவுடன்சோறும்... *
ஓதுமஞ்சனமுமொருவழிப்போக்கும் ... *
அடியெனைக்கண்டாலலறிக்கலங்கிட... *
மாற்றான்வஞ்சகர்வந்துவணங்கிட ... *
காலதூதாளெனைக்கண்டாற்கலங்கிட - *
அஞ்சிநடுங்கிடஅரண்டுபுரண்டிட ... *
வாய்விட்டலறிமதிகெட்டோடப் ... *
படியினின்முட்டப்பாசக்கயிற்றால்... *
கட்டுடனங்கங்கதறிடக்கட்டு ... ... *
கட்டியுருட்டிக்கால்கைமுறியக் — ]
கட்டுக்கட்டுக்கதறிடக்கட்டு ... *
முட்டுமுட்டுவிழிகள்பிதுங்கிட ... *
செக்குச்செக்குச்செதிற்செதிலாக- ... *

சொக்குச்சொக்குச்சூர்ப்பகைச்சொக்கு... *
குத்துக்குத்துக்கூர்வடிவேலால் ... ... *
பற்றுப்பற்றுப்பகலவன்றணலெரி ... *
தணலெரிதணலெரிதணலதுவாக ... *
விடுவிடுவேலைவெருண்டதுவோட ... *
புலியுநரியும்புன்னரிநாயும் ... ... *
எலியுங்கரடியுமினித்தொடர்ந்தோடத்... *
தேளும்பாம்புஞ்செய்யான்பூரான் ... *
கடிவிடவிஷங்கள்கடித்துயரங்கம்... *
ஏறியவிடங்களெளிதினிலிறங்க ... *
ஒளிப்புஞ்சுளுக்குமொருதலைநோயும்... *
வாதஞ்சயித்தியம்வலிப்புப்பித்தம் ... ... *
சூலைசயங்குன்மஞ்சொக்குச்சிரங்கு... *
குடைச்சல்சிலந்திகுடல்விப்பிரிதி... *
பக்கப்பிளவுபடர்தொடைவாழை ... *
கடுவன்படுவன்கைத்தாள்சிலந்தி ... *
பற்குத்தரணைபருவரையாப்பும் ... *
எல்லாப்பிணியுமென்றனைக்கண்டால் ... *
நில்லாதோடநீயெனக்கருள்வாய் ... ... *
ஈரேழுலகமுமெனக்குறவாக ... ... *
ஆணும்பெண்ணுமனைவருமெனக்கா ... *
மண்ணாளரசருமகிழ்ந்துறவாக்வும் *
உன்னைத்துதிக்கஉன்றிருநாமம் ... ... *
சரவணபவனேசையொளிபவனே ... *
திரிபுரபவனேதிகழொளிபவனே *

பரிபரபவனேபவமொளிபவனே ... 3
அரிதிருமருகா அமராபதியை ... *
காத்துத்தேவர்கள்கடுஞ்சிறை விடுத்தாய் ... *
கந்தாகுகனேகதிர்வேலவனே .. ... *
கார்த்திகைமைந்தாகடம்பாகடம்பனை ... *
இடும்பனையழித்தஇனியவேல்முருகா .. *
தணிகாசலனேசங்கரன்புதல்வா .. *
கதிர்காமத்துறைகதிர்வேல்முருகா ... *
பழனிப்பதிவாழ் பாலகுமாரா .. ... *
ஆவினன்குடிவாழ் அழகியவேலா .. .. *
செந்தின்மாமலையுறுஞ் செக்கதிர்வேலா *
சமராபுரிவாழ்சண்முகத்தரசே ... *
காரார்குழலாள்கலைமகள் நன்றாய் ... *
என்னாவிருக்கயானுனைப்பாட... ... *
எனைத்தொடர்ந்திருக்குமெந்தைமுருகனை *
பாடினேனாடினேன்பரவசமாக ... *
ஆடினேன் ஆடினேன் ஆவினன் பூதியை *
நேசமுடன்யானெற்றியிலணியப் ... *
பாசவினைகள்பற்றதுநீங்கி ... *
உன்பதம்பெறவேயுன்னருளாக ... *
அன்புடனிரட்சி அன்னமுஞ்சொர்ணமும் *
மெத்தமெத்தாகவேலாயுதனார் *
சித்திபெற்றடியேன்சிறப்புடன்வாழ்க *
வாழ்கவாழ்கமயிலோன்வாழ்க *
வாழ்கவாழ்கவடிவேல்வாழ்க .. *

வாழ்கவாழ்கமலைக்குருவாழ்க *
வாழ்கவாழ்கமலைக்குறமகளுடன் — *
வாழ்கவாழ்கவாரணத்துவசம் —
வாழ்கவாழ்கவென்வறுமைகணீங்க - *
எத்தனைகுறைகள்-எத்தனைபிழைகள் — *
எத்தனைபடியேன்எத்தனைசெய்தால் — *
பெற்றனீகுருபொறுப்பதுன்கடன் — *
பெற்றவள்குறமகள்பெற்றவளாமே — *
பிள்ளையென்றன்பாய்ப்பிரியமளித்து- *
மைந்தனென்மீதுன்மனமகிழ்ந்தருளி *
தஞ்சமென்றடியர்தழைத்திடவருள்செய் *
கந்தர்சஷ்டிக்கவசம்விரும்பிய-பாலன்றேவரா
யன்பகர்ந்ததைக்-காலையின்மாலையிற்கருத்துட
னாளும்-ஆசாரத்துடனங்கந்துலக்கி *
நேசமுடனொருநினைவதுவாகி கந்தர்சஷ்டிக்
வசமிதனைச், சிந்தைகலங்காது தியானிப்பவர்க
ள்-ஒருநாண்முப்பத்தாறுருக்கொண்டு *
ஓதியேசெபித்துஉகந்துநீறணிய ]
அட்டதிக்குள்ளோரடங்கலும்வசமாய் *
திசைமன்னரெண்மர்செயலதுவருளுவார்- *
மாற்றலரெல்லாம்வந்துவணங்குவார் *
நவகோண்மகிழ்ந்துநன்மையளித்திடும் - *
நவமதனெனவும்நல்லெழிற்பெறுவர்- *
எந்தநாளுமீரெட்டவாழுவர் - *
கந்தர்கைவேலாங்கவசத்தடியை *

வழிபாய்க்காணமெய்யாய்விளங்கும்
விழியாற்காண வெருண்டிடும்பேய்கள்
பொல்லாதவனைப்பொடிபொடியாக்கும்
நல்லோர்நினைவில்நடனம்புரியும்
சர்வசத்துருச்சங்காரத்தடி
அறிந்தெனதுள்ளம்அஷ்டலட்சுமிகளில்
வீரலட்சுமிக்குவிருந்துணவாக
சூரபத்மாவைத்துணித்தகையதனால்
இருபத்தேழ்வர்க்குவந்தமுதளித்த
குருபரன்பழனிக்குன்றினிலிருக்கும்
சின்னக்குழந்தைசேவடிபோற்றி
எனைத்தடுத்தாட்கொளென்றனதுள்ளம்
மேவியவடிவுறும்வேலவபோற்றி
தேவர்கள்சேனாபதியேபோற்றி
குறமகள்மனமகிழ்கோவேபோற்றி
திறமிகுதிவ்வியதேகாபோற்றி
இடும்பாயுதனேஇடும்பாபோற்றி
கடம்பாபோற்றிகந்தாபோற்றி
வெற்றிபுனையும்வேளேபோற்றி
உயர்கிரிகனகசபைக்கோரரசே
மயினடமிடுவோய்மலரடிசரணம்
சரணஞ்சரணஞ்சரவணபவஓம்
சரணஞ்சரணஞ்சண்முகாசரணம்

கந்தர்சஷ்டிக்கவசமுற்றிற்று